# தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்
# TAMILNADU TEACHERS EDUCATION UNIVERSITY
(Established under Tamil Nadu Act 33 of 2008)
Gangaiamman Koil Street, Karapakkam, Chennai – 600 097.
website: www.tnteu.in


**No.TNTEU/R/Affl./1263** **நாள்: 14.06.2018**

**Dr.N.RAVINDRANATH TAGORE, Ph.D.**
**REGISTRAR i/c**

**பெறுநர்:**

அனைத்து முதல்வர்கள் / செயலர்கள்
இணைவுபெற்ற சுயநிதி கல்வியியல் கல்லூரிகள்.

**அய்யா / அம்மையீர்,**

**பொருள்:** தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம் - இணைவுபெற்ற சுயநிதி கல்வியியல் கல்லூரிகள் - 2018-19-ஆம் கல்வியாண்டில் - **பின்பற்ற வேண்டிய நெறிமுறைகள்** - தொடர்பாக.

***

தமிழ்நாட்டில் ஆசிரியர் கல்வியின் தரத்தை மேம்படுத்தி, தரமான ஆசிரியர்களை உருவாக்குவதற்கு தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம் தொடர்ந்து பல்வேறு சீரிய முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. அதன்பொருட்டு, வருகின்ற கல்வியாண்டில் (2018-19) தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகத்துடன் இனைவுபெற்ற சுயநிதி கல்வியியல் கல்லூரிகள் கீழ்க்காணும் நெறிமுறைகளை தவறாது பின்பற்றுமாறு அறிவுறுத்தப்படுகிறது.

**<u>நெறிமுறைகள்</u>**

- சுயநிதி கல்வியியல் கல்லூரிகளில் காலியாக உள்ள முதல்வர் பணியிடத்தை உடனடியாக நியமனம் செய்து வருகின்ற **<u>29.06.2018</u>**-ஆம் நாளுக்குள் பல்கலைக் கழகத்தின் ஒப்புதல் பெறுதல் வேண்டும்.
- கல்லூரியில் நடத்தபெறும் அனைத்து பாடப்பிரிவுகளுக்கும் (Pedagogical Subjects) ஆசிரியர் நியமனம் செய்யப்பட்டிருக்க வேண்டும். ஆசிரியர் நியமனம் இல்லாத பாடப்பிரிவுகளில் கண்டிப்பாக மாணவர் சேர்க்கை செய்தல் கூடாது.
- 2018-19-ஆம் கல்வியாண்டில், வகுப்புகள் தொடங்கும் நாள் முதல், கல்லூரியில் பணிபுரியும் ஆசிரியர்கள், மாணவ-மாணவியர்களுக்கு தொடு உணர்வு வருகைப்பதிவு (Bio-metric Attendance) முறையை கண்டிப்பாக நடைமுறைப்படுத்துதல் வேண்டும்.
- பி.எட். பட்ட வகுப்பில் குறிப்பிட்ட ஒவ்வொரு பாடப்பிரிவிற்கும் (Each Pedagogical Subject) 25 மாணவர்களுக்கு மேல் சேர்க்கை செய்திட அனுமதிக்கப்பட மாட்டாது.
- சுயநிதி கல்வியியல் கல்லூரிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள், பிற பணியாளர்களின் மாத ஊதியத்தை அவர்களின் வங்கி கணக்கில் செலுத்திட வேண்டும்.
- 2018-19-ஆம் கல்வியாண்டில், அரசு/அரசு உதவிபெறும்/சுயநிதி கல்வியியல் கல்லூரிகளில் பி.எட். மாணவர் சேர்க்கை வழிகாட்டு நெறிமுறைகள் குறித்த தமிழக அரசின் உயர்கல்வித்துறையின் 21.03.2018 நாளிட்ட அரசாணை எண்.G.O.(1D)No.94-ல் குறிப்பிடப்பட்டுள்ள மாணவர் சேர்க்கை தகுதி (Eligibility) குறித்த விதிமுறைகளை சுயநிதி கல்வியியல் கல்லூரிகள் நெறி பிறழாது பின்பற்றுமாறு அறிவுறுத்தப்படுகிறது.

அவ்வாறு மேற்காண் நெறிமுறைகளை பின்பற்ற தவறும் கல்லூரிகளுக்கு, ***நிகழ் கல்வியாண்டில் (2018-19) மாணவ-மாணவியர்கள் சேர்க்கைக்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது எனத் தெரிவிக்கலாகிறது.***

**பதிவாளர் (பொ)**